## அதிகாரம் 14

# ஆபிரகாம் போரில் ஈடுபடுதல் இரு ராஜாக்களை சந்தித்தல்

யோர்தான் பள்ளத்தாக்கை லோத்து தேர்வு செய்த, மற்றும் சோதோமுக்கு நேராக கூடாரத்தை அடித்தது பல வகைகளில் சோகமானது. அது முற்றிலும் துன்மார்க்கமான ஒரு சூழலுக்கு குடும்பத்தை வெளிக்காட்டினது, அது அவர்களின் நன்னடக்கைக்கு ஆபத்தை வரவழைத்த காண்க (19:1-8 காண்க). அது அவர்களது ஒரே தெய்வ விசுவாசத்திலிருந்து அவர்களை அடியோடு புரட்டிப் போட்டது. அவர் துன்மார்க்கத்திற்காக மக்களிடம் கணக்குக் கேட்கின்றார், இப்படிப்பட்ட தீமையான செயல்களிலிருந்து மனந்திரும்பாதவர்களை நியாயம் விசாரிக்கிறார் காண்க (19:12-22). அது அவர்களது வாழ்க்கையை மிகவும் பாதித்தது ஏனெனில் சோதோமில் அவர்கள் குடியிருந்ததினால். அவர்கள் நான்கு தென் நாட்டு ராஜாக்களினால் பிடிக்கப்பட்டு, தாக்கப்பட்டார்கள். சவக்கடலின் பொதுப் பகுதியில் பகுதியிலிருந்த ஐந்து இராஜாக்களைத் தண்டிக்க அவர்கள் எஜமான்களுக்குத் தரவேண்டிய வருடாந்திர கப்பம் கட்டமறுத்ததினால் அவர்களை தண்டிக்க தங்களது போர்வீரர்களுடன் வந்தனர். கானானின் எல்லைகளிலிருந்து வந்த ஐந்து இராஜாக்கள் தங்களின் பட்டணங்களையும் அதனைச் சுற்றியிருந்த நிலப்பகுதிகளை ஆண்டு வந்தவர்கள் ஆவார்கள். நான்கு தென் நாட்டு ராஜாக்கள் பலமுள்ளவர்களாக இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் மிகப் பெரிய நிலப்பகுதிகளை ஆண்டனர், மட்டுமல்லாது தங்களது ஆட்சிக்கு உட்பட்ட பல பட்டணங்களையும் ஆண்டனர். சிலர் விடுதலையை அனுபவித்தாலும், அப்பட்டணங்கள் கப்பம் கட்ட கட்டாயப் படுத்தப்பட்டனர்.

## இராஜாக்களின் போர் (14:1-12)

**[1]சிநெயாரின் ராஜாவாகிய அம்ராப்பேலும், ஏலாசாரின் ராஜாவாகிய அரியோகும், ஏலாமின் ராஜாவாகிய கெதர்லா கோமேரும்,**

ஜாதிகளின் ராஜாவாகிய திதியாலும் இருந்த நாட்களில்; 2அவர்கள்
சோதோமின் ராஜாவாகிய பேராவோடும், கொமோராவின்
ராஜாவாகிய பிர்சாவோடும், அத்மாவின் ராஜாவாகிய சிநெயாவோடும்,
செபோயீமின் ராஜாவாகிய செமேபரோடும், சோவார் என்னும்
பேலாவின் ராஜாவோடும் யுத்தம்பண்ணினார்கள். 3இவர்களெல்லாரும்
உப்புக்கடலாகிய சித்தீம் பள்ளத்தாக்கிலே கூடினார்கள். 4இவர்கள்
பன்னிரண்டு வருஷம் கெதர்லாகோமேரைச் சேவித்து, பதின்மூன்றாம்
வருஷத்திலே கலகம்பண்ணினார்கள். 5பதினாலாம் வருஷத்திலே
கெதர்லா கோமேரும், அவனோடே கூடியிருந்த ராஜாக்களும் வந்து,
அஸ்தரோத்கர்னாயீமிலே இருந்த ரெப்பாயீமியரையும், காமிலே
இருந்த சூசிமியரையும், சாவேகீரியத்தாயீமிலே இருந்த ஏமியரையும்,
6சேயீர் மலைகளில் இருந்த ஓரியரையும், வனாந்தரத்துக்கு அருகான
எல்பாரான்மட்டும் முறியடித்து, 7திரும்பிக் காதேஸ் என்னும்
என்மிஸ்பாத்துக்கு வந்து, அமலேக்கியருடைய நாடனைத்தையும்,
அத்சாத்சோன் தாமாரிலே குடியிருந்த எமோரியரையும்கூடச்
சங்கரித்தார்கள். 8அப்பொழுது சோதோமின் ராஜாவும், கொமோராவின்
ராஜாவும், அத்மாவின் ராஜாவும், செபோயீமின் ராஜாவும், சோவார்
என்னும் பேலாவின் ராஜாவும் புறப்பட்டுச் சித்தீம் பள்ளத்தாக்கிலே,
9ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேரோடும், ஜாதிகளின்
ராஜாவாகிய திதியாலோடும், சிநெயாரின் ராஜாவாகிய
அம்ராப்பேலோடும், ஏலாசாரின் ராஜாவாகிய அரியோகோடும்
யுத்தம்பண்ணப் புறப்பட்டு, அந்த ஐந்து ராஜாக்களோடும் இந்த நாலு
ராஜாக்களும் யுத்தம்பண்ணினார்கள். 10அந்தச் சித்தீம் பள்ளத்தாக்கு
எங்கும் நிலக்கீல் உண்டாகும் கேணிகள் இருந்தது. சோதோம்
கொமோராவின் ராஜாக்கள் முறிந்தோடி அங்கே விழுந்தார்கள்;
மீந்தவர்கள் மலைகளுக்கு ஓடிப்போனார்கள். 11அப்பொழுது அவர்கள்
சோதோமிலும் கொமோராவிலுமுள்ள பொருள்கள் எல்லாவற்றையும்,
போஜனபதார்த்தங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு
போய்விட்டார்கள். 12ஆபிராமின் சகோதரனுடைய குமாரனாகிய
லோத்து சோதோமிலே குடி யிருந்தபடியால், அவனையும், அவன்
பொருள்களையும் கொண்டு போய்விட்டார்கள்.

கிழக்கத்திய நான்கு இராஜாக்கள் மேற்கே படையெடுத்துவந்த கதை சிலரால் வரலாற்று பின்னணியம் இல்லாத ஒரு கட்டுக்கதையென எண்ணப்படுகிறது. ஆனால் இது ஒரு உண்மையான வரலாற்று உண்மைதான் என நம்புவதற்குப் பல நல்ல காரணங்களும் உண்டு. உதாரணமாக ஆசிரியர் இந்த கதையை விவரிக்க பண்டைய ஆதாரங்களை பின்பற்றுகின்றார். அவர் இப்பகுதியை எழுத தொடங்கும் போது பயன் ஒழிந்த பழைய பெயர்களைப் பயன்படுத்தினார். பெயர்களையும், கூற்றுகளையும் பிற்காலத்தில் தன்

வாசகர்கள் புரிந்துகொள்ளும் வண்ணமாக பயன்படுத்தினார் (14:2, 3, 7, 8, 17 காண்க).

**வசனம் 1.** 14ம் அதிகாரத்தை விமர்சகர்களால் முழுமையாக அடையாளம் காணமல் இருப்பதினால் பிரச்சனையாகப் பார்க்கின்றனர். வெளி ஆதாரத்திலிருந்து பார்க்கும் போது, ஐந்து மேற்கத்திய நேச நாட்டு இராஜாக்கள் கிழக்கத்திய ராஜாக்கள் நான்கு பேருடன் போர் செய்தனர். **ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேர்** கிழக்கத்திய ராஜாக்களின் கூட்டுப் படையின் தலைமைப் பொறுப்பெடுக்கிறார் இவருக்கு மேற்கத்திய ராஜாக்கள் 12 வருடங்கள் அடிமைகளான சேவித்தனர் (14:4). கெதர்லா கோமேர் நோவாவின் வம்சத்தின் சேமின் மூத்த மகன் வழிவந்தவர்கள் "ஏலாம்" என்ற பெயரைப் பெற்றார் வழிவந்தவர்கள் (10:22). ஏலாமியர்கள் முன்னொருக்காலத்தில் பண்டைய பெர்சியாவில் (இன்றைய ஈரானின் தென்மேற்கு பகுதி) வாழ்ந்தனர். சூசா அவர்களது தலைநகராக விளங்கியது.

கெதர்லா கோமேர், (1) **சிநெயாரின் ராஜாவாகிய அம்ராப் பேலுடனும்** ("சிநேயர்" பண்டைய பாபிலோனியாவின் பெயர்), (2) **ஏலாசாரின் ராஜாவாகிய அரியோகு**, (3) **ஜாதிகளின் ராஜாவாகிய திதியால்.** இவர்களில் ஒருவர் கூட சமீபத்திய கிழக்கத்திய பகுதி ராஜாக்களோடு அடையாளப்படுத்தப்படவில்லை, மேலும், "ஏலாசார"[1] மற்றும் "கோயியிம்" ("புறஜாதிகள்," அல்லது "இனம்") இவர்களும் இந்தப் பாடத்திற்கு வெளியே அறியப்படாதவைகள். கிழக்கத்தியப் பகுதிகளில் ஆட்சி செய்த அரசுகளைப் பற்றிய சரித்திர அறிவு குறிப்பாக முதல் ஆயிரமாவதாண்டின் பாதிவரைக்கும் துண்டுகளைப் போலுள்ளது. சாட்சிகள் காட்சியில் இல்லாததினால் இச்சிற்றரசர்களைக் குறித்து வரலாற்றில் சாட்சிகளின் ஆதாரமே இல்லை எனக் கூறிடலாகாது.

இந்தப் பெயர்கள் பாடத்தில் நாம் நம்பிக்கைக் கொள்ள இன்னொருக் காரணமாகும். நம்பகத்தன்மையின் மோதிரங்கள் அவைகள். ஆபிரகாமின் காலத்தில் கிழக்கத்திய மக்கள் பயன்படுத்தியப் பெயருக்கு ஏற்றப் பெயரே. "கெதர்லா கோமேர்," என்பது ஏலாமியர்களின் பெயர் (*குதிர்* அத்துடன் தெய்வம்). இப் பெயர் "ஏலாவின் அரசன்" என்ற பதவிக்குப் பொருத்தம். "அம்ராப்பேல்" செமித்தியப் பெயர்களில் உள்ளது. "சினேரின் ராஜா" வுக்குப் (பாபிலோன்) பொருத்தமான பெயர். "அரியோகு" ஊரியர்களின் மூலத்தில் உள்ளது, பண்டைய மாரி பட்டணங்களில் (*ஆரீவியுக் /ஆரியூக்*) மற்றும் நூஸி (*ஆரியுக்கி)* இப்பெயர்களுக்கு இணையாக உள்ளது. "திதில்" பண்டைய இத்தத்தியப் பெயர் (*துடிக்யலெ*) பல இராஜாக்கள் இப்பெயரில் அறியப்பட்டனர். "திதில்" என்பது "மக்களது ராஜ" அனட்டோலியாவின்[2] தலைவருக்கு உள்ள பட்டப் பெயருக்கு

சமமானப் பெயர், 1000 அல்லது 1500 ஆண்டுகளுக்குப் பின் இஸ்ரவேலர் இப் பெயர்களைக் கொண்டு கலாச்சாரத்திற்குப் பொருத்தமான கதாநாயகர்களை உருவாக்கி முன் காலத்திற்கு ஏற்ப புனைக்கதைகள் பலப் புனைந்தனர் என்பது ஏற்புடையதல்ல.

**வசனம் 2.** இங்கு பட்டியலிடப்படும் ராஜாக்களுக்கு எதிராக கிழக்கத்திய கூட்டுப்படையினர் **போர் செய்தனர்**: **சோதோமின் ராஜா பேரா, கொமோராவின் ராஜா பிர்சா, அத்மாவின் ராஜா சிநெயா, செபோயீமின் ராஜா செமேபார், சோவார் என்னும் பேலாவின் ராஜா (அதாவது சோவார்).** பட்டியலில் கடைசி ராஜாவின் பெயர் பாலா மட்டும் பட்டியலிலிருந்து ஏன் தவறுகின்றது என்பது நிச்சயமற்றதாக இருக்கிறது. இந்த நிராகரிப்பு பட்டியலில் உள்ள மற்ற இராஜாக்களின் பெயர் பட்டியலுக்கு நம்பகத்தன்மையை அதிகமாக்குகின்றது இந்தப் பகுதியின் ஆசிரியர் இந்தப் பெயர்களை புனைக்கதைக்கு பயன்படுத்த விரும்பியிருந்தால் அதை இந்த வேளையில் செய்திருக்க வேண்டும், ஆனால் அதற்கு வாய்ப்பில்லை எதிர் மறையாக, பெயரை சேர்த்துக்கொள்ளத் தவறியது கூற்றின் நம்பகத்தன்மைக்கு மதிப்பளித்து, தகவல்களை பாதுகாத்து ஒரு பெயர் தவறினாலும் அடுத்தவருக்கு மாறாத தன்மையுடன் பகிர்வதாகும். வேதாகமத்தின் தகவல்கள் பெயர்கள் மற்றும் இராஜாக்கள் ஆண்ட இடங்கள் அனைத்தும் மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

**வசனம் 3.** நான்கு கிழக்கத்திய இராஜாக்கள் இறுதியாக மேற்கே ஐந்து மேற்கத்திய ராஜாக்களுக்கு எதிராக வந்தனர். இவர்கள் அனைவரும் **உப்புக்கடலாகிய சித்தீம் பள்ளத்தாக்கிலே** வாழ்ந்தனர். (14:2) ல் வரும் மேற்கத்திய பட்டணங்கள் மற்றும் சித்தீம் பள்ளத்தாக்கு எது என உறுதியிட்டுக் கூற இயலவில்லை, பொதுவாக இப்பகுதி சவக் (உப்பு) கடலின் தென் கோடியில் அமைந்திருந்ததாக நம்பப்படுகின்றது[3] (14:8-10ன் குறிப்பைக் காண்க).

**வசனம் 4.** மேற்கில் இருந்த ஐந்து சிற்றரசர்கள் உண்மையாக **பன்னிரண்டு ஆண்டுகள் கெதர்லாகோமேரை சேவித்தனர்.** என்று ஆசிரியர் குறிப்பிட்டார். **பதிமூன்றாம் ஆண்டிலே, அவர்கள் கலகம் செய்தனர்.** அதாவது தங்களது தலைவருக்கு வருடாந்திர கப்பம் கட்ட மறுத்தனர் (2 இராஜா. 18:7, 13-16 காண்க).

**வசனங்கள் 5-7. பதினான்காம் ஆண்டு** வந்த போது **கெதர்லாகோமேரும்** அவனது கூட்டுப்படையினரும் மேற்கே போர்தொடுத்தனர். முரட்டாட்டமான அடிமைகளை தாக்க ஏலாமிய இராஜா ஏன் “பதினான்காம் ஆண்டுவரைக்” காத்திருக்க வேண்டியிருந்தது? ஒருவேளை வரப்போகிற பின்விளைவை மேற்கத்திய இராஜாக்கள் உணர்ந்து மறுசீராய்வுச் செய்ய வழங்கப்பட்ட நேரமாயிருக்கலாம். இல்லையென்றால் இந்த பெரிய போரை நடத்தவும் மேற்கே; செல்லும் தூரத்து செலவீனங்களை கணக்கிடவும், போதிய

படைவீரர்களை தயார் செய்யவும் கூட்டுப்படையின் தலைவர்கள் மற்ற நேசநாடுகளின் தலைவர்களை தமது பெரியத் திட்டங்களை ஏற்றுக் கொள்ளச் செய்யவும், மேற்கத்திய மாநில நகரத்து வெற்றியை உறுதிப் படுத்தவும் நேரம் தேவைப்பட்டது.

கிழக்கத்திய கூட்டுப்படை முதலில் வடக்கேயிருந்து தெற்கே இராஜா பாதையில் (எண். 20:17; 21:22ஐ காண்க) யோர்தானின் கிழக்கே மத்திய மலைப் பிரதேசங்களைத தாக்கினார்கள். இஸ்ரவேல் மக்கள் எதிர் திசையில் - தெற்கே யிருந்து வடக்கே - யோர்தானை கடந்து கானானைக் கைப்பற்ற கிழக்கே எரிகோவை மேற்கொள்ளும் முன் இதே பாதையில் யாத்திரை செய்தனர் என உபாகம புத்தகத்தின் முதல் அதிகாரம் கூறுகிறது. 14:5-7ல் கிழக்கத்திய இராஜாக்கள் யுத்தத்தின் ஆரம்பத்தில் தாக்கிய இடங்களின் பெயர்கள் பட்டியலிடப் பட்டுள்ளது.

**அஸ்தரோத் கர்னாயீமிலே இருந்த ரெப்பாயீமியரையும்**: கலிலேயாக் கடலுக்கு கிழக்கே பாசானிலிருந்தது அஸ்தரோத் (கர்னாயீமுக்கு அருகில் [இருந்த]) பட்டணம் (டெல் அஸ்டர்ஹ, என இன்று அறியப்படுகிறது. தென் சீரியாவின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ளது). ஆபிரகாமுக்குப் பின் ரெப்பாயீமியர் எதிர்க்க முடியாத பலமான ஜாதியாயினர். கானானை சுதந்தரிக்க இஸ்ரவேலர் இவர்களைத் தோற்கடிக்க வேண்டியிருந்தது. இவர்கள் பாசானிலே அதிகமாக இருந்தனர். வேதம் சொல்கையில் இவர் களில் சிலர் மிகவும் உயரமானவர்கள் என்கிறது (உபா. 2:10, 11, 20, 21). ஓக் இவர்களின் கடைசி இராஜா இவரது கட்டில் ஒன்பது முழம் (பதிமூன்று அடி) நீளமானது (உபா. 1:4; 3:10, 11).

**காமிலே இருந்த சூசிமியர்**: வேத புத்தகத்திலிருந்து மட்டுமே இவர்களை நாம் அறிய முடிகிறது. சிலர் இவர்களை உபாகமம் 2:20ல் வரும் "சம்சூமியர்"களுடன் ஒப்பிட்டு சொல்கின்றனர் இந்தப் பாடத்தை சவக்கடல் சுருள் ஆமோதிக்கிறது. அது அம்மோனில் உள்ள "ஜீம்ஜாமிம்" எனக் குறிப்பைத் தருகிறது.[4] காம் பாசானுக்கும் மோவாபுக்கும் இடையே உள்ள கீலேயாத்தில் அமைந்துள்ளது. சிலர் இந்த இடத்தை டெல் ஹாமுடன் அடையாளப் படுத்துகின்றனர். இது யோர்தானில், இர்பிட்டு, சில மைல் தென் மேற்கே "ராஜாவி பாதை நெடுஞ்சாலை"யில் அமைந்துள்ளது.

***சாவே கீரியத்தாயீமிலே இருந்த ஏமியரையும்***: சாவே (שָׁוֵה, *Shaweh*) என்ற பெயருக்கு "சமவெளி" அல்லது "பள்ளத்தாக்கு" என்றுப் பொருள். எனவே, கீரியாத்தீயிமின் அருகில் உள்ள சம பூமி, மோவாப்புக்கு வடக்கே உள்ள ஒரு சிறிய நகரம் (எண். 32:37; யோசுவா 13:19; எரே. 48:1, 23; எசே. 25:9). கீரியத்தாயீம் என்னிடம் சரியாக எங்கு இருக்கிறது என உறுதியாகச் சொல்லிட இயலாது.

**சேயீர் மலைகளில் இருந்த ஓரியரையும், வனாந்தரத்துக்கு அருகான எல்பாரான்மட்டும் முறியடித்து**: சேயீர் என்பது சவக்கடலுக்கும்

அக்கியூபா வளைகுடாவுக்கும் இடையே அமைந்துள்ள மலைப்பிரதேசம் (உபா. 2:12, 22), ஏதோமியர் இப்பகுதிக்குச் சென்று குடியிருப்பதற்கு முன்னர் ஓரியர் இங்கு வாழ்ந்தனர். கிழக்கத்திய இராஜாக்கள் ஏல் பாரான்வரைக்கும் கைப்பற்றினார்கள் என பாடம் கூறுகின்றது. இவர்கள் ஏலாத் (இன்றைய இலிடத்) வரைக்கும் சென்றதாகத் தெரிகிறது.[5] ஈசோன்-கிப்பர் ஏலாத்துக்கு அருகிலிருந்தது. பிந்திய பழைய ஏற்பாட்டு வரலாற்றில் அக்கியூபா வளைகுடா இது ஒரு முக்கியமான பட்டணம் (எண். 33:35; உபா. 2:8; 1 இராஜா. 9:26-28; 10:11-22).

கிழக்கத்திய படை வடமேற்கே **திரும்பி என்மிஸ்பாத்துக்கு** வந்தனர். இது பிற்காலத்தில் **காதேஸ்** (காதேஸ் பர்னியா) என அழைக்கப்பட்டது. வாக்குத்தத்த நாட்டை வேவுகாரர்கள் வேவு பார்க்க கானானுக்குள் சென்றபோது இஸ்ரவேல் மக்கள் பாளையம் இறங்கியிருந்த இடமான சோலைவனம் (எண். 13:26; 20:22). இது வாக்குத்தத்த நாட்டின் தென் எல்லை. இந்த நான்கு இராஜாக்களும் **அமலேக்கியருடைய நாடனைத்தையும் கைப்பற்றினார்கள்.** அவர்கள் பாதி நாடோடிகள், வேதாகமத்திற்கு வெளியே அறியப்படாத மக்கள். இஸ்ரவேலரின் அலைச்சலின் நாற்பதாம் ஆண்டு முடிவில் இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து வந்தபின் சீனாய் வனாந்திரத்தில் இவர்கள் இஸ்ரவேலரைத் தாக்கினார்கள் (யாத். 17:8-16), பிலேயாமின் நியாயத் தீர்ப்பின் வாக்கியத்தினால் அமலேக்கியர் ஏதோமியருடன் நெருங்கியத் தொடர்பு படுத்தப்பட்டுள்ளனர் (எண். 24:18-20) சவுலும் தாவீதும் இவர்களை மேற்கொண்டனர் (1 சாமு. 15; 27; 30).

**அத்சாத்சோன் தாமாரிலே குடியிருந்த எமோரியர்:** இந்த இடம் 2 நாளாகமம் 20:2ல் எங்கேதி என அடையாளம் காணப்பட்டுள்ளது. இது சவக்கடலின் மேற்கு கரையில் அமைந்துள்ள நீர் நிறைந்த ஓர் சோலைவனம், பிற்காலத்தில் தாவீதும் அவன் மனிதர்களும் சவுலின் படைக்கு பயந்து அடைக்கலம் தேடிய இடம் (1 சாமு. 23:29; 24:1) எங்கேதி “மம்ரே என்னும் சமபூமிக்கு” வெகுத் தொலைவில் இல்லை ஆபிரகாம் குடியேறியிருந்த எபிரோனுக்கு சமீபத்திலிருந்தது (14:13). எனவே, சந்தேகத்திற்கு இடமின்றி முற்பிதாக்கள் அப்பகுதியிலிருந்த எமோரியரோடு கூட்டு வைத்திருந்தனர் எனத்தெரிகிறது[6] லோத்தும் சோதோமியர்களும், சோதோம் மற்றும் கோமோரியர்களது பொருட்களும் சிறைப்பட்டுப் போன பின்னர், அவர்களும் இவருடன் சேர்ந்து கிழக்கத்தியரை பின்தொடர்ந்தனர் (14:11-16).

கிழக்கத்திய இராஜாக்கள் வடக்கேயிருந்த ஆறு குழுக்களை ஏன் முதலில் தாக்கினார்கள் என ஆதியாகமம் வெளிப் படுத்துவதில்லை, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு பகுதியிலிருந்த ஐந்து இராஜாக்களே இவர்களுக்கு விரோதமாகக் கலகம் செய்தவர்களாவார்கள். ஒருவேளை அவர்கள் இவர்களுடன் கூட்டாயிருக்கலாம் - அல்லது அவர்களுடன்

கூட்டாயிருக்கலாம் எனச் சந்தேகப்பட்டிருக்கலாம் - மேற்கேயுள்ள மெசெப்பெத் தோமிய கட்டுப்பாட்டிற்குள்ளிருக்கும் பட்டணங்களுக்கு எதிராக எழும்புகிறவர்களாக இருந்திருக்கக்கூடும். அவர்களின் காரணம் என்னவாக இருந்திருந்தாலும் கலகத்திலீடுபட்டிருந்த ஐந்து பட்டணத்து மக்கள் வடக்கே ஒவ்வொரு இடத்தையும் கைப்பற்றுவதைக் கேட்டு பயப்பட, பயத்தை ஏற்படுத்துவதே நோக்கம்.

**வசனங்கள் 8-10.** நான்கு கிழக்கத்திய ராஜாக்கள் ஆறு முக்கிய (அல்லது மூல) அடங்காத நகரங்களை தோற்கடித்த பின்னர், அவர்களது கலகக்காரர்களுக்கு எதிராக போர்தொடுத்தனர். ஆச்சரியப்படுத்தும் விதமாக **சோதோம், கோமோரா, அதாமா, சேபோயீம், சோவார் (என்னும் பேலா)** ஆகிய ஐந்து ராஜாக்களும் தங்களை மேற்கொள்ள வந்த **கெதர்லாகோமேர்**, **திதியால்**, **அம்ராப்பேல்**, **அரியோக்** ஆகியோருக்கு எதிராய் முன்னேறி னார்கள், **நான்கு ராஜாக்கள் ஐவருக்கு** எதிராக வருவது, போர் தந்திர முறை முட்டாள்தனமாகத் தோன்றலாம். மேற்கத்திய ராஜாக்களும் அவர்களது படையினரும் மேற்கொள்ளுவார்கள் போல் தெரிகிறது. பலமுள்ள கிழக்கத்திய ராஜாக்களின் பலத்திற்கு ஈடுக் கட்டுவார்களோ, **சித்தீம் பள்ளத்தாக்கிலே** மேற்கத்தியப் படை தோற்றுப்போனது (14:3ஐ காண்க).

அந்தச் **சித்தீம் பள்ளத்தாக்கு எங்கும் நிலக்கீல் உண்டாகும் கேணிகள்** இருந்தது. என்ற விளக்கிக் குறிப்புச் சொல்கிறது. “கீல்” அல்லது “தார்” என்பது இயற்கை நீர் கரிமப் பொருள் இது பிச்சுக்கட்டி. இவை மத்திய கிழக்குப் பகுதிகளில் ஆங்காங்கு படிந்திருக்கும் சில வேளைகளில் பூமியிலிருந்துப் பொங்கி வரும். இதை பாபேல் கோபுரம் கட்டும் சமயத்தில் சுட்ட செங்கல்களுக்குப் பூசப் பயன்படுத்தினார்கள் (11:3). ஆபிரகாம் வளர்ந்த, ஊரில் அமைந்திருந்த பெரியகோயில் (ஜிக்கரட்) கட்டிடத்தின் வெளிப்புற செங்கலில் பூசியிருந்தனர். அங்கும் இந்தப் படிமங்கள் காணப்பட்டது.[7] எனவே அறிஞர்கள் சித்தீம் பள்ளத்தாக்கிலே யுத்தம் நடந்தது என எண்ணுகின்றனர், இது சவக்கடலின் தென் கோடியின் அருகில் இருந்தது. முதல் நூற்றாண்டில் ஜோசிபாஸ் சவக்கடலை “கீல் ஏரி”[8] என அழைக்கிறார். ஏனெனில் கீல் (பிச்சுக்கட்டி) பெருமளவில் மிதப்பதாக காணப்பட்டது, இப்பொழுதும் ஆங்காங்குக் காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.[9]

**சோதோம், கொமோராவின்** இராஜாக்கள் முறிந்தோடி கில் கேணியிலே விழுந்தார்கள் என தகவல் தொடர்கின்றது. சோதோமின் இராஜா திரும்பவும் 14:17ல் குறிப்பிடப்படுகின்றார் என்பது தவிர்த்து, அவர்கள் அஙகேயே இறந்துப் போனார்கள் என்பது இயற்கையாக நிதானிக்கிற ஒன்று. இது பிரச்சனையை ஏற்படுத்தாது, ஏனெனில் எபிரெய வினைச்சொல் נָפַל (*napal*, நபால் “விழு”) என்பதற்கு ஒருவர் தானாக தம்மைத் தாழ்த்துவது என்றுக் கூட எடுத்துக் கொள்ளலாம்.

உதாரணமாக 24:64ல் ரெபெக்காள் “ஒட்டகத்திலிருந்து விட்டு இறங்கினதற்கு” ஒப்பானது, அல்லது “கீழே இறங்குதல்” (NIV) என்பதாகும். 14:10ல் இதே முறையில் இந்த வினைச்சொல் பயன்படுத்தப்பட்டதானால் சோதோம் கோமோரா வின் இராஜாவும் அந்த சமயத்தில் சாவை தவிர்த்து, தப்பித்து ஒளிந்து கொள்வதற்காக கேணிக்குள் குதித்திருக்கலாம் (யோசுவா 10:16 காண்க). எதிர்மறையாக, பொதுவான வினைச்சொல் இங்குப் பயன்படுத்தப்பட்டிருந்து இராஜாக்கள் கீல் கிணற்றில் வீழ்ந்து மடிந்திருந்திருப்பாரேயாகில் நாட்டுக்குடிகள் உடனேத்தானே புதிய இராஜாக்களை ஏற்படுத்தியிருப்பார்கள். ஆனால் சோதோமின் ராஜா ஆபிரகாமிடம், இவர் மக்களைக் காப்பாற்றி வந்தப் போது (14:17) மக்களைப் பற்றிப் பேசுகின்றார். என்ன நடந்திருப்பினும் ஐந்து இராஜாக்களின் தோல்வி முழுவதும் நிறைவுச் செய்தது. யுத்தத்தில் மீந்தவர்கள் **மலை நாட்டிற்கு தப்பி ஓடினார்கள்.**

**வசனங்கள் 11, 12.** வெற்றியை முன்னிட்டு நான்கு இராஜாக்களும் யுத்தத்தின் கொள்ளையை தங்களுக்கென எடுத்துக்கொண்டனர். **சோதோம் கோமோராவின் உணவுப் பொருட்கள்**, உட்பட ஏனைய பிறதட்டுமுட்டுகளையும் அக் காலக்கட்டத்தில் சோதோமில் வாழ்ந்து வந்த **ஆபிரகாமின் உறவினரான லோத்தையும்**, அவன் குடும்பத்துடன் அவனது **சொத்துக்களையும்** சிறை பிடித்துக் கொண்டு போயினர். இது லோத்தைப் பற்றின புதிய தகவல். கடந்தமுறை அவரைப் பற்றியக் குறிப்பு, “சோதோமுக்குத் தன் கூடாரத்தை மாற்றினார்” (13:12) என்பதாகும். இப்பொழுது இவர் பட்டணத்தில் வாழுகின்றார்; இந்த யுத்தத்திற்கும் இவருக்கும் சம்மந்தமேயில்லை. கிழக்கத்திய இராஜாக்களுக்கு எதிராக முட்டாள்தனமாக கலகம் செய்தபோது இவரும் அவ்வூரின் குடிகளில் ஒருவராக இருந்தார்.

## ஆபிரகாம் லோத்தையும் பிற கைதிகளையும் மீட்டல் (14:13-16)

**13தப்பியோடின ஒருவன் எபிரெயனாகிய ஆபிராமிடத்தில் வந்து அதை அறிவித்தான்; ஆபிராம் தன்னோடே உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே அப்பொழுது குடியிருந்தான்.**
**14தன் சகோதரன் சிறையாகக் கொண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேள்விப்பட்டபோது, அவன் தன் வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களாகிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்களுக்கும் ஆயுதம் தரிப்பித்து, தாண் என்னும் ஊர்மட்டும் அவர்களைத் தொடர்ந்து,**
**15இராக்காலத்திலே அவனும் அவன் வேலைக்காரரும் பிரிந்து, பவிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து, அவர்களை முறியடித்து,**

**தமஸ்குவுக்கு இடதுபுறமான ஓபாமட்டும் துரத்தி, [16]சகல பொருள்களையும் திருப்பிக் கொண்டுவந்தான்; தன் சகோதரனாகிய லோத்தையும், அவனுடைய பொருள்களையும், ஸ்திரீகளையும், ஜனங்களையும் திருப்பிக் கொண்டு வந்தான்.**

**வசனம் 13.** சவக்கடலின் வடக்கேயும் கிழக்கேயும் தெற்கேயும் மேற்கேயும் நடக்கும் யுத்தத்தைப் பற்றி ஆபிரகாம் கட்டாயம் தெரிந்திருப்பார். மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே அப்பொழுது குடியிருந்தான் (காண்க 13:18). ஆனால் சோதோம் கோமோராவின் சூழல் என்ன என்று தப்பியோடின ஒருவன் வந்துச் சொல்லும் வரையிலும் அறியாதிருந்தான். வந்தவர் லோத்துக்கும் அவர் குடும்பத்திற்கும் நிகழ்ந்த துருதிருஷ்டத்தையும், கிழக்கத்திய படையினரால் சமவெளியில் உள்ள பட்டணத்திற்கு நிகழ்ந்த பெரும் தோல்வியையும் அதன் பலனாக சிறைப்பிடிக்கப்பட்டதையும் கூறி அறிவித்தான், ஆபிரகாம் அறிந்து கொண்டான்.

**எபிரெயனாகிய ஆபிரகாமுக்கு** தப்பி வந்தவன் துர் செய்தியைக் கொண்டு வந்தான். என வசனம் கூறுகிறது. எமோரிய சகோதரர் களான, ஆநேர், "மம்ரே," **எஸ்**கோல் இவர்களை ஆபிரகாமிலிருந்து வித்தியாசப்படுத்திக் காண்பிக்கிறது.[10] பழைய ஏற்பாட்டில் இங்கே தான் முதன் முதலாக "எபிரெயன்" (עִבְרִי, *'Ibri*, 'ஈப்ரி)[11] என்னும் பதம் பயன்படுத்தப்படுகின்றது, ஒரே ஒரு முறை ஆபிரகாமுக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளது. இப்பதம் பிற்காலத்தில் யோசேப்பின் கதையிலும் (39:14; 40:15; 41:12; 43:32) இஸ்ரவேலர்களின் சரித்திரத்திலும் (யாத். 1:15; 2:6, 11; 1 சாமு. 4:6; 13:3, 19; 14:11; 29:3; எரே. 34:9; யோனா 1:9) பயன்படுத்தப் பட்டுள்ளது. அது எப்பொழுதும் ஆபிரகாமையும் அவன் வம்சத்தையும் பிற மக்கள் கூட்டத்தினின்று வேறுப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட பதம்.

ஒரு வேளையில் "எபிரெயர்" என்னும் பதம் "ஹாபிரு" (சில வேளைகளில் "ஹாபிரு" அல்லது "அபிர்ரு" என எழுதப்படும் அல்லது உச்சரிக்கப்படும்). என ஒலிப்பதால் இந்த மக்கள் இருவரும் சம்பந்தப்பபட்டிருப்பதாகக் கருதப்பட்டது. கிறிஸ்துவுக்கு முன் இருபதாம் நூற்றாண்டு முதல் பதினோராம் நூற்றாண்டு வரையுள்ளக் காலக்கட்டத்தைச் சேர்ந்த பண்டைய சமீபத்திய கிழக்கத்திய பகுதி முழுவதிலுமுள்ள வசனங்களில் "ஹாபிரு" என்ற குறிப்புகள் காணப்படுகின்றது. இவர்கள் இனக்கலப்புள்ளவர்கள் இவர்கள் நாடோடிகளாக வாழ்ந்தனர், இவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் இவர்கள் அன்னியர்களாகக் கருதப்பட்டனர். சிலவேளைகளில் இவர்கள் தப்பி ஓடுகிறவர்களாகவும், கொள்ளைக் காரர்களாகவும் இருந்தனர். இக்குழுக்களின் அங்கத்தினர்கள் சிற்றரசர்களிடமும், சிறிய பட்டணங்களிலும் கூலிக்காக அவர்களது படையில் ராணுவ வீரர்களாக சேர்ந்து அவரகளுக்காகப் போர் செய்தனர். பிற்காலத்தில்

இஸ்ரவேலர்கள் கானானைக் கைப்பற்றின போது கானானியர்கள் இவர்களை "ஹாபிரு"க்கள் என்றே எண்ணியிருக்க வேண்டும். எப்படியிருப்பினும், எபிரெயர்களுக்கும் ஹாபிருக்களுக்கும் உள்ளத் தொடர்பு கைவிடப்படக்கூடியது ஏனெனில் பண்டைய சமீபத்திய கிழக் கத்திய பகுதி வசனங்கள் சொல்லும் ஹாபிருக்களுக்குப் பின் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே எபிரெயர்கள் பலுகிப்பெருகி ஒரு தனி இனக்குழுவாக மாறினார்கள். எபிரெயர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருக்கும் போதோ அல்லது வனாந்திரத்தில் அலைந்து கொண்டிருக்கும் போதோத்தான் இவர்கள் கானானில் கொள்ளையிட்டுக் கொண்டிருந்தனர்.[12]

சோதோம் கோமோராவின் தோல்வியும் லோத்தும் அவன் குடும்பமும் சிறைபட்டுப் போன செய்தி ஆபிரகாமுக்குப் பெரிய அடியாக இருந்தது, ஆனால் இவன் முன்னதாகவே எமோரிய சகோதரர்களுடன் போர் உடன்படிக்கைச் செய்திருந்தார்: மம்ரே, எஸ்கோல், மற்றும் ஆநேர் ஆகிய மூன்று எமோரியர்களின் ஊழியர்கள், **ஆபிரகாமின்** ஊழியர்களைப் போலவே யுத்தம் செய்ய வல்லவர்கள் என்பதால் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்து கொண்டவர்களென வசனம் சொல்லுகிறது.

בַּעֲלֵי בְרִית (*baᵃley bᵉrith*, பாஹலெ பிரித்) என்ற எபிரெய பதம் "ஒப்பந்தம்" எழுத்துப்படி "உடன்படிக்கையை உடையவர்"[13] என்பதுப் பொருள்.[14] *bᵉrith* பிரித் என்ற பதம் "உடன்படிக்கை" அல்லது இருவருக்கிடையை ஏற்படுத்தப்படும் ஒப்பந்தத்தின் கட்டு எனலாம். தேவன் நோவாவுடன் உடன்படிக்கை செய்தபோது இதே வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது (6:18; 9:9-16). ஆபிரகாமைப் பொறுத்து பல இடங்களில் (15:18; 17:2, 4, 7, 9, 10) கூறப் பட்டுள்ளது. பின் நூற்றாண்டுகளில் மோசேயின் நியாயப் பிரமாணம் கானானில் எமோரியர்களுடன் எந்த உடன்படிக்கையும் செய்யவேண்டாம் என இஸ்ரவேலர்கள் தடுக்கப்பட்டனர், ஏனெனில் அவர்கள் இவர்களது இருதயத்தை யாவேயை சேவிக்காதபடி அன்னிய தெய்வங்களை சேவிக்கச் செய்து விடுவார்கள் என்பதினால் (உபா. 7:1-4). ஆபிரகாமைப் பொறுத்து இது பெரும் பிரச்சனையாக இருக்கவில்லை, அவர் கேராரின் இராஜாவோடு உடன்படிக்கை செயது அதில் தேவனுக்கு முன் உண்மையாக இருக்கப்போவதாக சத்தியம் செய்திருந்தார் (20:1, 2; 21:22-24).

தங்கள் தேசத்தில் உள்ள வெளி நாட்டவருடன் உடன்படிக்கைக்குள் மூன்று எமோரிய சகோதரர்கள் ஏன் சேர்ந்தனர்? இந்தக் கேள்விக்கான குறிப்பிட்ட பதிலை பரிசுத்த வேதாகமம் சொல்லவில்லை. ஆனால் அவர்களுடைய முடிவிற்கான காரணங்கள் அநேகம் உண்டு. (1) ஆபிரகாம் ஒரு பணக்காரன் மற்றும் தனக்காக சண்டையிடுகிற அநேக வேலைக்காரர்கள் மற்றும் அடிமைகள் கொண்ட செல்வாக்குள்ள

நபராக (முதல்வர் அல்லது ஷேக்) இருக்கிறார் என்பதை அவர்கள் பார்த்திருப்பார்கள். (2) ஆபிரகாமும் அவன் ஆட்களும் குறிப்பிடத்தக்க அடிமைகள் சொத்தையும், பொன்னும், மற்றும் விலங்குகளையும் கொண்ட வனாகவும், அண்மையில் எகிப்திலிருந்து வந்தான் என்பதையும் அவர்கள் அறிந்திருப்பார்கள். உண்மை சம்பவம் குறித்து ஒன்றும் அறியாமல், அவன் ஒரு பிரசித்தி பெற்ற எகிப்தியன் மற்றும் பார்வோனால் கனம்பண்ணப்பட்டிருக்கலாம் என்று அவர்கள் ஊகித்திருக்கலாம். (3) அவர்கள் ஆபிரகாமை சந்திக்கையில், மெசெப்பொடோமியாவிலிருந்து கானான் தேசத்திற்குப் போகும்படி தேவனுடைய அழைப்பைக் குறித்தும், அங்கே தன்னையும் தன் சந்ததியையும் ஆசீர்வதிப்பார் என்றும், மேலும் அங்கே அவனை சந்திக்கிறவர்களுக்கும் ஆசீர்வாதமாக இருப்பார் என்றும் சொல்லியிருப்பார். ஆகவே உடன்படிக்கையில் இணைந்ததும், மற்றும் அவனுடைய ஆட்களுடன் சேர்ந்து சண்டையிடவும், அவர்களுக்குப் பதிலாக பரிந்து பேசப்படுகிற ஆசீர்வாதத்தில் பங்கடையவுமே, அந்த எமோரியர்கள் ஆபிரகாமுடன் இணை வதற்கான காரணங்கள் இவைகளும் மற்றும் மேலும் பல ஆகும் (காண்க 14:19, 20, 24).

**வசனம் 14.** தன் உறவினரான லோத்தும்[15] (அவனது குடும்பமும், அவனது உடமைகளும்) **சிறையாகக் கொண்டு போகப் பட்டதை** ஆபிராம் கேள்விப்பட்ட போது, **பயிற்சி பெற்ற மனிதர்களை வழி நடத்தினான்.** "பயிற்சிபெற்ற" என்ற வார்த்தைக்கு எபிரெயப் பதம் חָנִיךְ (*chanik*, சானிக்), இப்பதம் இந்த ஒரு இடத்தில் மட்டுமே பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பதம் பாலஸ்தீனாவில் உள்ள சிற்றரசர்களும் (சிறு தலைவர்களும்) தங்களுக்கென வைத்திருந்த "போர் தளவாடங்களை கையாள பயிற்சி பெற்ற" ஊழியர்கள் என்றப் பொருளைத் தருகின்றது, என ஆபிரகாமின் காலத்திற்கு கி.மு. முந்திய இரண்டாம் ஆயிரமாவது ஆண்டைச் சேர்ந்தது.[16] ஒழிக்கப்பட்ட எகிப்திய வசனப்பகுதிகள் கூறுகிறது. இங்கு, 318 பேர் ஆபிரகாமால் கூலிக்கு அமர்த்தப் பட்டவர்கள் கிடையாது. அதற்கு எதிரிடையாக அவர்கள் அனைவரும் அவன் **வீட்டிலே பிறந்த** அடிமைகள்; என்பது தெளிவாகிறது. இவர்களின் பெற்றோர் தங்கள் எஜமான் மெசெப்பொத்தோமியாவிலிருந்து கானானுக்கு பிரயாணம் செய்வதற்கு முன் பல ஆண்டுகளாக அவருக்கு ஊழியம் செய்து வந்தனர். இந்த அடிமைகள் ஆபிரகாம் எகிப்திய பார்வோனிடம் பெற்ற வெகுமதியான அடிமைகளல்ல என்பதை வித்தியாசப் படுத்துகிறது. எகிப்தியர்கள் மிக குறுகியக் காலம் மாத்திரமே இவரோடு இருந்தவர்களாவார்கள். முற்பிதா செல்வந்தர் மட்டு மல்ல, சக்திவாய்ந்த தலைவராக (ஷேக்) இருந்தார். ஒருவேளை இவரிடம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருந்திருப்பார்கள். இவரது 318 பயிற்சிப் பெற்ற போர் வீரர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்.

ஆபிரகாமும் அவன் ஆட்களும், **தாண் என்னும் ஊர் மட்டும் அவர்களைத் தொடர்ந்து** சென்றனர். தாணின் பழைய பெயர் “லாயீஸ்” (அல்லது “லாசேம்”) இதற்கு இப்பெயர் தாண் கோத்திரத்தார் இந்நகரத்தை நியாயாதிபதிகளின் காலத்தில் கைப்பற்றி தாண் என்று பெயர் சூட்டுமளவும் தாண் என அழைக்கப்படவில்லை (நியா. 18:29; யோசுவா 19:47 காண்க). இக்காலத்திற்குப் பின்னர் நகலெடுப்பவர்கள் “லாயீசை” “தாண்” எனவே பிற்காலத்து வாசகர்கள் ஆபிரகாமின் காலத்தில் இந்த யுத்தம் எங்கு நடந்ததென எளிதில் அறிவதற்காக ஆதியாகம வசனங்களில் எழுதத் தொடங்கினார்கள்.

**வசனம் 15. தன் படையைப் பிரித்த** பின்னர் ஆபிரகாமும் அவன் ஆட்களும் ஆச்சரியப்படும்படி **இரவிலே** தாக்குதல் செய்தனர். பிற்காலத்திலே இஸ்ரவேலரின் சரித்திரத்தில் கிதியோனின் யுத்த தந்திரமும் வெறும் முன்னூறு பேருடன் (நியா. 7:16-23) இப்படியாக இருந்தது. ஆபிரகாமின் பிரிவில் எமோரியரின் மூன்று சகோதரர்களின் வீரர்களும் அடங்கியிருந்தனர். **அவனதுக் கூட்டுப்படையினர்** தங்கள் எதிரிகளை **தமஸ்குவுக்கு** வடக்கு புறமான **ஓபா மட்டும்** துரத்தினார்கள்.

**வசனம் 16.** கிழக்கத்திய இராணுவத்தின் வெற்றியான வழி எதையுமே ஆதியாகமத்தின் ஆசிரியர் சொல்கிறதில்லை, ஆனால் ஆரானிலே தேவன் ஆபிரகாமுக்குச் செய்த வாக்குத்தத்தத்தை மறந்திடலாகாது: “உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர் வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்,” (12:3). இங்கு நான்கு ராஜாக்களின் இராணுவத்தினரை தேவன் சபித்ததாக (ஆபிரகாமின் படையினர் தோற்கடித்ததினால்) தெரிகிறது. காரணம் அவர்கள் லோத்தையும் அவனது உடமைகளையும், ஆட்களையும் குடும்பத்தையும் சிறைப்பிடித்ததினால் ஆபிரகாமை அவமதித்தனர். இப்பகுதி முடியும் போது கொள்ளையிடப்பட்ட எல்லாவற்றையும் கொள்ளையிட்டவர்களிடமிருந்து வெற்றிக் கொண்டவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். மிக முக்கியமானது கிழக்கத்திய இராணுவம் சிறைப் பிடித்துச் சென்ற **லோத்தும் அவனது உடமைகளும் பெண்கள்** உட்பட அனைத்து **ஆட்களும்** பாதுகாப்புடன் மீட்கப்பட்டனர்.

## ஆபிரகாம் இரு இராஜாக்களை சந்தித்தல் (14:17-24)

**17அவன் கெதர்லாகோமேரையும், அவனோடிருந்த ராஜாக்**
**களையும் முறியடித்துத் திரும்பிவருகிறபோது, சோதோமின் ராஜா**
**புறப்பட்டு, ராஜாவின் பள்ளத்தாக்கு என்னும் சாவே பள்ளத்**
**தாக்குமட்டும் அவனுக்கு எதிர்கொண்டு போனான். 18அன்றியும்,**
**உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின்**
**ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து,**
**19அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய**

**உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக.**
**[20]உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக் கொடுத்த உன்னதமான**
**தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம்**
**எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். [21]சோதோமின் ராஜா**
**ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர்**
**எடுத்துக்கொள்ளும் என்றான். [22]அதற்கு, ஆபிராம் சோதோமின்**
**ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர்**
**சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின்**
**வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றை யாகிலும்**
**எடுத்துக்கொள்ளேன் என்று, [23]வானத்தையும் பூமியையும்**
**உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என்**
**கையை உயர்த்துகிறேன். [24]வாலிபர் சாப்பிட்டதுபோக, என்னுடனே**
**வந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே என்னும் புருஷருடைய பங்குமாத்திரமே**
**வரவேண்டும்; இவர்கள் தங்கள் பங்கை எடுத்துக் கொள்ளட்டும்**
**என்றான்.**

**வசனம் 17.** இக்கதையின் முந்தியப் பகுதியில் **சோதோமின் ராஜா கெதர்லாகோமேருடன்** யுத்தம் செய்ய விடாப்பிடியாக இருந்தான் (14:8, 9). யுத்தம் தொடங்கிய மாத்திரத்தில் எதிரிப் படையிடம் தோல்வியைத் தழுவினார்கள். ஆனால் அவன் மட்டும் தப்பி கீல் கேணியில் குதித்து ஒளிந்து கொண்டான் (14:8-10 குறிப்பு காண்க). எப்படியிருப்பினும், இக்கதையின் இப்பகுதியில் கெதர்லாகோமேரை ஜெயித்த, ஆபிரகாமுக்கு முன் சோதோமின் ராஜா தாழ்த்தப்பட்டு நிற்கிறார்.

சோதோமின் ராஜாவும் ஆபிரகாமும் சந்தித்த இடம் **சாவே பள்ளத்தாக்கு (என்னும் ராஜாவின் பள்ளத்தாக்கு)**. “சாவே” என்றால் “சமவெளி” அல்லது “பள்ளத்தாக்கு” என்று பொருள். இந்த இடத்தை பற்றி வருகின்ற இன்னொரு குறிப்பு 2 சாமுவேல் 18:18. மட்டுமே; அப்சலோம் தனக்கு குழந்தைகள் இல்லாமையால் இந்த இடத்தில் ஒரு ஸ்தூபியை நாட்டினான். சாவே எருசலேமுக்கு கிழக்கே சற்றுத் தொலைவில் தெற்கே அமைந்துள்ள இடம். இங்கு கிதரோன், ஹென்னோம், திரொபொயின் போன்ற பள்ளத்தாக்குகள் கூடுகின்றது.[17]

**வசனம் 18. சாலேமின் ராஜா மெல்கிசேதேக்கும்** ஆபிரகாமை சந்திக்க வருகின்றார். மெலகிசேதேக்கு எழுத்துப்படி என்றால் “நீதியின் ராஜா” என்பதாகும்; “சாலேமின் ராஜா” என அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார், இதற்கு “நீதியின் ராஜா” என்று பொருள் (எபி. 7:2). சங்கீதம் 76:2ல், “சாலேம்” என்பது எருசலேமின் பழைய பெயர், “சீயோன்” என்றப் பெயருடன் ஒத்தப் பொருள் கொண்ட பெயர். தாவீது தன் பெலவான்களுடன் எபூசியரின் சீயோன் கோட்டையைப் பிடித்து, அங்கு ஒரு அரண் மனையைக் கட்டி அதற்கு

“தாவீதின் நகரம்” என பெயர்ச் சூட்டினார் (2 சாமு. 5:7, 9; 1 நாளா. 11:5, 7). சாலொ மோனுடைய நாட்களில், தாவீதின் நகரம் குறிப்பாக “சீயோன்” என அறியப்பட்டது (1 ராஜாக். 8:1).

மெல்கிசேதேக்கு, ஆபிரகாம் போரிட்டு வந்த கிழக்கத்திய ராஜாக்களை மேற்கொண்டதற்காக நன்றியுள்ளவரானார், எனவே போர்க்களத்தில் வெற்றியுடன் நீண்ட தூரத்திலிருந்து களைப்புடன் திரும்பி வந்த வீரர்களுக்கு **அப்பமும் திராட்சை ரசமும்** கிருபையாக **கொண்டு வந்தார்.** போர் வீரர்களுக்கு சாதாரண உணவான அப்பமும் நீருமே வழங்கப்படும், ராஜாக்களுக்கோ அப்பமும் திராட்சைரசமும் வழங்கப்படும் (1 சாமு. 16:20). இவைகள் சாதாரணமாக மிருக பலியுடன் காணப்படும் (எண். 15:2-10; உபா. 14:22-26; 1 சாமு. 1:14; 10:3). மெல்கிசேதேக்கு, ஆபிரகாமையும் அவனது படைவீரர்களையும் ராஜ உபசரிப்புச் செய்ததிலிருந்து அவரது குணாதிசயம் தெரிய வருகின்றது. இவர் உண்மையிலே நல்லவரும், நீதியுள்ளவருமாவார், தங்கள் ஜீவனைப் பணயம் வைத்து மிக ஆபத்தான இந்த நீண்ட தூர பயணம் மேற்கொண்டு பிறருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களை இவர் உண்மையிலேயே கனப்படுத்த விரும்பினார்.

மெல்கிசேதேக்கு ராஜாவாக இருப்பதுமல்லாமல், **உன்னதமான தேவனுக்கு ஆசாரியனாகவும்** இருந்தார் (אֵל עֶלְיוֹן, *’El ‘Elyon*, ஏல் எலியோன்). “தேவன்” என்பதற்கான எபிரெயப் பெயர் “ஏல்” என்பதாகும் ஏலியோன் என்றால் உயர்வான ஒரு பொருளின் “உன்னதமான” என்ற பொருளிலும், இன்னொரு கண்ணோட் டத்தில் இந்த எழுத்து “மேலானா,” “மிக மேன்மையான” மற்றும் “உயர்ந்த” என்றப் பொருளைத் தருகின்றது.[18] எனவே இது தேவனுக்கு மிகவும் பொருத்தமான பெயர், வானத்திலும் பூமியிலும் ஆளுகைச் செய்கிறவர்.

கானானிய தேவர்கள் “ஏல்” மற்றும் “ஏலியோன்” என்பது இன்னொரு தெய்வம் (அவனுடைய பேரன்), “ஏல் எலியோன்” என்ற நாமத்தையுடைய அன்னிய தேவனின் ஆசாரியனாக அடையாளப் படுத்தப்பட்டிருக்கிறார். “ஏல்” மற்றும் “ஏலியோன்” என்பது கானானியர்களின் புராணக் கதைகளில் வரும் வித்தியாசமான தேவர்கள். அவர்களது இலக்கியங்களில் இந்தப் பெயர் ஒருமையில் வருவதில்லை.[19] இந்த தேவனுடைய ஆசாரியன் கானானியருக்கே உரிய ராஜாவாயிருப்பாரேயாகில் அவர் தன்னுடைய தேவர்களில் ஒருவனுடைய நாமத்தில் ஆசீர்வதித்திருப்பான். அது ஆபிர காமுக்கும் அவனோடிருந்த எமோரிய சகோதரர்களுக்கோ தெரியாத பன்மை கொண்ட நாமம். மேலும் மெல்கிசேதேக் மெய்யான சமாதானத்தின் நீதியின் ராஜாவான மேசியாவுக்கு அடையாளப் படுத்தப்பட்டவராக மாறியிருக்கமாட்டார் (சங். 110:1-4; எபி. 7:1-4, 7, 21), ஆபிரகாமை சந்திப்பதற்கு முன்னதாக இவருக்கு இந்த குணநலன்கள் இருந்திருக்கலாம். இந்தக் கதையில் ராஜா எப்படி மெய் தேவனை

அறிந்தார் என வெளிப் படுத்தப்படவில்லை; ஆனால் ஆபிரகாமுக்கு தம்மை கர்த்தர் வெளிப்படுத்தினதுப் போலவும் (12:1-3; அப். 7:2-4) பல நூற்றாண்டுகளுக்குப் பின் பிலேயாமுக்கு (எண். 22:1-24:25) வெளிப்படுத்தினது போலவும் இவருக்கும் கர்த்தர் தாமே தம்மை வெளிப்படுத்தி இருப்பார்.

**வசனம் 19.** ஆபிரகாமுக்கு மெல்கிசேதேக்கு ஆசீர்வாதத்தை கூறுகின்றார், இப்படியாக: **வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக.** மெல்கிசேதேக்கின் ஆசீர்வாதம் அவர் ஒரு தேவனுடைய ஆசாரியன் என்று ஆபிரகாமுக்கு உணர்த்தியது, "நீதியின் ராஜா" (எபி. 7:2) யூத மக்களின் கோத்திரப் பிதாவைக் காட்டிலும் பெரியவர். (யூத) ரபிகளுக்கு இந்த காரியத்தில் ஒத்தக் கருத்தில்லை. சிலர் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் ஆபிரகாமுக்கு தாழ்ந்தது என்றும், மற்றவர்கள் உயர்ந்ததெனவும், அவன் ஒரு தேவ தூதனெனவும் குறிப்பாக பிரதான தூதனாகிய மிகாவேல் எனவும் நம்புகின்றனர்.[20] எபிரெய ஆசிரியர், அவரை ஆவிக்குரிய ஒரு வஸ்துவாக அல்லாமல் பெரிய "மனிதனாக" காட்டுகிறார். இவருக்கு வம்சவரலாறு என்று முன்னோர்களோ, பின் சந்ததியாரோ இருந்தது யூத மக்களுக்குத்த தெரியாது (எபி. 7:3, 4) ஆசாரியத்துவத்திற்கு வம்ச பாரம் பரியத்தை வைத்துத் தேடுகிறவர்களுக்கு தாழ்ந்தவராக காணப் படுகிறது.

பழைய ஏற்பாட்டுப்படி, ஆசீர்வதிக்கிறவர் அது ஆசாரியனாயினும், ராஜாவாயினும் ஆசீர்வதிக்கப்பட்டவனைக் காட்டிலும் பெரியவர் (யாத். 39:43; எண். 6:22-27; உபா. 10:8; 2 சாமு. 6:18). ஆபிரகாமை விட மெல்கிசேதேக்கின் மேன்மை விவாதிக்க அவசியமில்லாதக் கூற்று எபிரெயர் 7:7ல் "சிறியவன் பெரியவனால் ஆசீர்வதிக்கப்படுவான்" என்பதே. ஆகையால், மெல்கிசேதேக்கின் சரீர வல்லமையோ, அரசியல் பின்பலமோ, பொருளாதார பலமோ அவனது மேன்மையை காட்டுவதில்லை மாறாக நீதியின் ராஜா, மகா உன்னதமான தேவனுடைய ஆசாரியன், இவன் ஆவிக்குரிய விஷயத்தில் ஆபிரகாமை விடப்பெரியவர். சிலர் நம்புகிறப்படி முற்பிதா யாவேயின் நாமத்தை 14:22ல் பயன்படுத்தினாலும், இவர் உண்மை தேவனைக்குறித்து சாலேமின் ராஜாவுக்கு உபதேசம் எதுவும் சொல்கிறதில்லை. இவர் கர்த்தருடைய தனிப்பெயரைப் பயன்படுத்தினார். மெல்கிசேதேக்கிற்கு இந்த தனிப்பெயர் தெரியாமலிருக்கலாம் அல்லது மகா உன்னத தேவனுக்கு ஊழியராக இருப்பதால் அதுவே போதுமானதாக இருந்திருக்கலாம்.

சாலேமின் நீதியின் ராஜாவால் ஆபிரகாம் கனப்படுத்தப்பட காரணம் கிழக்கத்திய ராஜாக்களால் லோத்தும் அவன் மக்களும் உடமைகளும் சிறைப்பிடிக்கப்பட்டதற்கு எதிரிடையாக உள்ளது 14:14-16, ன்படி கிழக்கத்திய ராஜாக்கள் ஆபிரகாமை லோத்தையும்

அவன் மக்களையும் உடமைகளையும் சிறைப்பிடித்ததினால் "சபித்தனர்." இது இன்னொரு வல்லமையுள்ள பார்வோனைப் போல 12:17, 18 தனிப்பட்டவர்கள் ஆபிரகாமுடன் நல்ல உறவை ஏற்படுத்தாமலிருந்ததினால் தங்கள் மீது சாபத்தை வரவழைத்தனர். எப்படி இருப்பினும் மெல்கிசேதேக்கு ஆபிரகாமை "ஆசீர்வதித்தார்" ஆசீர்வாதம் மேற்கத்திய ராஜாக்களை தைரியத்துடன் தொடர்ந்து துரத்திச் சென்று மேற்கொண்டு சிறைப்பட்டோரை விடுதலை யாக்கி, உடைமைகளை திருப்பிக்கொணடு வந்ததற்காக அவரது நன்றிக்கடன்,

மெல்கிசேதேக்கு ஆபிரகாமை "உன்னதமான தேவனின்" நாமத்தில் ஆசீர்வதிக்கிறார், அவரை "வானத்தையும் பூமியை உடையவரென" அடையாளப்படுத்துகிறார். קָנָה (*qanah*, கியூனாஹ), "உடையவர்" என மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது இது பழைய ஏற்பாட்டிலே பல இடங்களில் காணலாம் சொத்து "லாபம்," அல்லது "பெற்றுக்கொண்டது" (அடைந்தது) எனப் பொதுவாகப் பொருள் கொள்ளப்படும்.[21] ஆர். லெயர்ட் ஹெரீஸ் கூற்றுப்படி சில இடங்களில் "கியூனாஹ," என்பது "சிருஷ்டி" எனவும் பொருள் கொள்ளப்படும் (14:19, 22; உபா. 32:6; சங். 139:13; நீதி. 8:22).[22] (NASB) யில் உடையவர் என்பதற்கு பதிலாக "கியூனாஹ", என்ற வார்த்தை 14:19, 22 "சிருஷ்டிகர்" என மொழிப்பெயர்க்கப்பட்டிருக்கிறது (NIV; NEB; REB; NAB; NJB; NJPSV; CEV; NLT). மேற்கண்டவைகளில் சூழலுக்கு ஏற்ப இயற்கையாக பொருள் சொல்லப்படுகிறது. இங்கு எந்த குறைக்கூறும் உபதேசமுமில்லை. இருவரும் தேவனை சரியான வகையில் காட்டுகின்றனர். தேவனே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர் அவர் எப்படி தன் சிருஷ்டியை உடையவராய் இருக்கமாட்டார்? அப்படியே வானத்தையும் பூமியையும் உடையவர் அதனை எப்படி சிருஷ்டிகராக இருக்கமாட்டார்? இறையியல் பார்வையில் இதில் எதாவது ஒன்றோ அல்லது இரண்டோ மொழிப்பெயர்ப்புகளை பார்க்கையில் அவைப் பூரணமானவை ஏனெனில் தேவன் சர்வவல்லமை நிறைந்த சிருஷ்டிகரும் தன் சிருஷ்டியை போஷிப்பவரும், உடையவராகவும் உள்ளார்.

**வசனம் 20.** ஆபிரகாம் போர்வீரன் என்பதினால் தன் வீரதீரத்தினாலே, வெற்றியடையவில்லை எனவும், ஆனால் அவரிடமிருந்த பயிற்சிப்பெற்ற வீரர்கள் சிறைப்பட்டோரை விடுவிக்கவும், உடமைகளை திருப்பிவரவும் அவர்கள் தேவன் பயன்படுத்திய கருவிகள் எனவும் உணர்ந்தவராய். மெல்கிசேதேக்கு தம் ஆசீர்வாதத்தைத் தொடர்கின்றார். **உன்** [ஆபிரகாமின்] **சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம்.**[23] "சத்துரு" (צַר, *tsar*, டசார்) என்றப் பதம் "ஒடுக்குகிறவர்" எனவும் பொருள்படும். ஏனெனில் வீரர்கள் முற்றுகையிட்டிருக்கையில்

மக்கள் அடைந்த வியாகுலமும் பயமும் அச்சமும் என்ன என விளக்குகிறது (எரே. 6:24).[24]

ஆபிரகாமின் கைகளில் தேவன் கிழக்கத்திய ராஜாக்களை ஒப்படைத்தது மற்றும் அவருக்கு மெல்கிசேதேக்கின் ஆசீர் வாதங்கள் எல்லாம் முற்பிதாவை ராஜாவும்/ஆசாரியனு மானவருக்கு **எல்லாவற்றிலும் பத்தில் ஒன்றை தசம பாகமாக பத்து சதவீதத்தைக்** கொடுக்கச் செய்தது. இப்பழக்கம் பண்டைய சமீபத்திய கிழக்கத்தியப் பகுதிகளில் இருந்துள்ளது. கோயில்களில் ஆசாரியர்களையும், அரண்மனைகளில் ராஜாக்களையும், மக்கள் ஆதரித்தனர்.[25] மெல்கிசேதேக்கு இந்த இரண்டு பதவிக்கும் தகுதியானவர். அவன் சாலேமிலிருந்த வேறு கானானிய அன்னிய ஆசாரியனாயிருந்திருப்பாரானால் ஆபிரகாம் அவருக்கு தசமபாகம் கொடுத்திருந்திருக்கமாட்டார். உண்மையாகவே அவரும் ஆபிரகாம் ஆராதித்த அதே தேவனுடைய ஆசாரியனாயிருந்தினால் இவர் தோற்று ஓடிப்போன ராஜாக்களிடமிருந்து கைப்பற்றிய தன் கொள்ளையில் பத்தில் ஒருபங்கை கொடுத்தார். இப்படிச் செய்ததினால் இவர் தன் பின் சந்ததிக்கு - யாக்கோபுக்கும் (28:22), இஸ்ரயேல் மக்களுக்கும் - தேவனுக்கு ஊழியம் செய்பவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி ஒரு முன் மாதிரியை வைத்துப் போனார் (லேவி. 27:30-33; எண். 18:21-32).

**வசனம் 21.** இந்தக்கட்டத்தில் கதையின் இந்த வரி திரும்பவும் **சோதோம் ராஜாவை** நோக்கித் திரும்புகிறது. ஆபிரகாம் மீதான அவனுடைய மனநிலை மெல்கிசெதேக்கின் மனநிலையிலிருந்து மிகவும் மாறுபட்டதாக இருக்கிறது. சோதோமின் ராஜா கோத்திரத் தலைவனிடம் ஒரு கோரிக்கையை வைத்தான். இது அவனுடைய அதிருப்தியை வெளிப்படுத்துகிறது. அதேசமயம் சாலேமின் ராஜா அப்பமும் திராட்சரசமும் கொண்டு வந்து ஆபிரகாமை ஆசீர்வதித்து கனப்படுத்தினதின் மூலம் தன்னுடைய பெருந்தன்மையை வெளிப்படுத்தினார். மேலும், சோதோமின் ராஜாவின் இந்த திடீர் கோரிக்கை எந்தவித மரியாதையையோ அல்லது நன்றி உணர்வையோ காண்பிக்கவில்லை. எபிரேய மொழியில் வெறும் ஆறு வார்த்தைகளில், **ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும்** என்பது இதன் அர்த்தமாகும். ஆபிரகாம், ஒரு வெற்றியாளராக, போரின் கொள்ளைப் பொருட்களின் விநியோகத்தை தீர்மானிக்கும் உரிமையைக் கொண்டிருந்தார். அந்த மக்களையும் அவர்களுடைய உடைமைகளையும் ஆபிரகாம் தனக்காக வைத்துக் கொள்வார் என்று சோதோமின் ராஜா பயந்திருக்கலாம்.

**வசனங்கள் 22, 23.** இராஜாவை தோற்கடித்தலிலும் மற்றும் ஆபிரகாமின் உணர்ப்பூர்வ பதிலிலும், அவன் தனக்குக் கீழ் எந்த ஒரு இராணுவ செல்வாக்கையும் கொண்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கிறது. முற்றிலும் எதிராக, சண்டையின் எந்த ஒரு **கொள்ளைப்**

**பொருளையும் மற்றும் நூலையும்** எடுக்கமாட்டேன் என்று, **வானத்தையும் பூமியையும் உடையவராகிய தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்** என்று ஆணையிட்டான். தான் ஆசீர்வாவாதமாயிருக்கும்படி க்கு கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறான் என்பதற்கு ஆபிரகாமின் ஆணையே சாட்சியாயிருக்கிறது. சண்டையில் அவனும் அவன் ஆட்களும் பெற்ற வெற்றியில் எந்த பூலோக இராஜாவுக்கும் அவன் கடன்பட்டவனாக இல்லை. சோதோமின் இராஜாவைக் குறித்து ஆதாரப்பூர்வமாக ஆபிரகாமுக்கு ஏற்கனவே தெரியும். இதன் மூலமாக **ஆபிராம் பணக்காரன் ஆனான்** என்று கூறுவதற்கு எந்த சாத்தியக்கூறுகளும் இல்லை, முற்பிதாக்கள் கொள்ளையடிக்கப் பட்ட எந்த பொருளையும் வைத்துக்கொள்ள மறுத்து வந்துள்ளனர்.

**வசனம் 24.** ஆபிரகாம் தன் சொந்த தீர்மானத்தை அவனது கூட்டுப்படையினர் மீது திணிக்கவில்லை. **யுத்தத்தில்** பங்குப்பெற்ற வாலிபர்கள் முன்னதாகவே தங்களது பசிக்காக உணவு சாப்பிட்டுப் போர் புரிய சக்தியடைந்தனர். ஆபிரகாம் பங்கெதுவும் எடுக்க வில்லை, மாறாக, தம்மோடு போருக்கு வந்த **ஆனேர், எஸ்கோல்**, மற்றும் **மம்ரே** ஆகியோர் தங்கள் உயிரையேப் பணயம் வைத்து சம்பாதித்த கொள்ளையில் தங்களுக்கு முறையாக கிடைக்க வேண்டிய பாகத்தை **எடுத்துக்கொள்ள அனுமதித்தார்.** அதற்காக சோதோம் ராஜாவின் அனுமதிக்காக காத்திருக்கவில்லை.

## நடைமுறைப்படுத்துதல்

### ஆபிரகாம் ஒரு “ஆசீர்வாதமாக” (13:5-7; 14:1-24)

12:2ல் தேவனுடைய ஆசீர்வாதத்தின் ஒரு பகுதி “ஆசீர்வாத மாயிருப்பாய்” என்பதாகும். 13, 14 அதிகாரங்களில் அவன் அந்த கட்டளையை நிறைவேற்றுகின்றான்.

*ஆபிரகாம் லோத்துக்கு ஆசீர்வாதமாகிறார்.* ஆதியாகமம் 12:1-3ல் தேவன் ஆபிரகாமுக்குப் பல வழிகளில் ஆசீர்வாதத்தை வாக்குப்பண்ணுகிறார். பாடத்தின் மத்தியில் மற்றவர்களுக்கு “ஆசீர்வாதமாக இருக்க” தேவன் முற்பிதாவுக்கு கட்டளையிட்டார். ஆயினும், ஆபிரகாம் சாராளை தன் மனைவி எனபதனை மறைத்து சகோதரி எனப் பொய் சொன்னதினிமித்தமாக (12:13, 17) பார்வோன் வீட்டின் மீது சாபத்தையும் (வாதையை) வருஷிக்கப் பண்ணினார். ஆபிரகாமும் இந்த அனுபவத்திலிருந்து ஒருப் பாடத்தைக் கற்றுக் கொண்டார். அவனும் அவன் பரிவாரங்களும் கானானுக்குள் திரும்பிவரும்போது, தன் உறவினரான லோத்தின் மேய்ப்பர்களுக்கும், தன் மேய்ப்பர்களுக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. இதனால்

விரும்புகின்ற இடத்தில் வாழ தாமே தேர்வுச் செய்யும் வாய்ப்பைப் பெறுகின்றார். இதன் வாயிலாக ஆபிரகாம் ஆசீர்வாதமாக மாறுகின்றார். ஏனெனில், லோத்தின் உறவினராக முதலாவது தேர்வு செய்து, தன் உறவினருக்கு எதிர் திசையில் செல்லும் உரிமையை உடையவராகிறார். ஆபிரகாம் எகிப்தில் கிடைத்த ஆசீர்வாதத்தை இன்னொரு வகையில் லோத்துடன் பகிர்ந்தளித்திருப்பார் (13:5, 6 காண்க).

புதிய ஏற்பாட்டின்படி, தேவன் தம் மக்கள் இன்றும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க விரும்புகின்றார். நிச்சயமாக கிறிஸ்தவர்கள் "நன்மை வரும்படிக்குத் தீமை செய்யக்கூடாது" (ரோமர் 3:8); இப்படிப்பட்ட செயல் மக்கள் தேவனை மகிமைப் படுத்துவதைக்காட்டிலும், அவரது நாமத்தை அவமதிக்கிறார்கள் (ரோமர் 2:24; 2 பேதுரு 2:2). மலைப்பிரசங்கத்தில் இயேசு (அதே சொற்றொடரைப் பயன்படுத்தாமலிருப்பினும்) சீஷர்களுக்கு தம்மைச் சூழ இருப்பவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கக் கற்பித்தார். "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத். 5:16). பேதுரு இந்த சத்தியத்தை விவரித்துச் சொல்கையில், "தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள்" "ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்" என்று (1 பேதுரு 3:9 முக்கியப்படுத்தி கூறுகின்றார்). அவர் தெளிவுபடுத்துகிறார், "ஆசீர்வதிப்பது" என்பது தேவன் ஆசீர்வதிப்பார் என்பது மட்டுமல்ல, செயல்படுவதும் ஆசீர்வாதமாகும். அப்போஸ்தலர் தம் வாசகர்களுக்கு கண்டிப்புடன் சொல்கிறார் "பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன்" (1 பேதுரு 3:11).

*ஆபிரகாம் எமோரிய சகோதரர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தார்*. கலகம் செய்த ஐந்து ராஜாக்களைத் தனிமைப்படுத்தும் நோக்கத்துடன் நான்கு கிழக்கத்திய ராஜாக்கள் சவக்கடலின் வடக்கு, தெற்கு, மேற்கு, மற்றும் கிழக்கு பட்டணங்களில் படையெடுத்து அப்பகுதிகளை அழித்தது, அப்பகுதிகளுக்கு அண்மையில் வாழ்ந்து வந்த ஆபிரகாமுக்கும், எமோரியருக்கும் பெரிய ஆபத்தாக இருந்தது, ஆனேர், எஸ்கோல் மற்றும் மாம்ரே (14:13) ஆகிய எமோரிய சகோதரர்களுடன் ஆபிரகாம் தற்காப்பு ஒப்பந்தம் (உடன்படிக்கை) செய்ய வேண்டியிருந்தது.

எமோரிய சமுதாயத்தின் மக்கள் தொகை என்ன, அல்லது எத்தனைப் போர் வீரர்கள் அவர்களுக்கு இருந்தனர் என்று ஒன்றும் நமக்குத் தெரியாது; ஆனால் ஆபிரகாமின் தனிப்படைப் பிரிவில்

ஆபிரகாமுக்கு 318 போர் வீரர்கள் இருந்தனர், எமோரியர்களுக்கும் ஒருவேளை தங்களை தாக்க வந்தால் பாதுகாப்புக்கு வேண்டும். மேலும் ஆபிரகாம் எமோரிய சகோதரர்களுடன் உண்மை தேவன் தன்னை அழைத்த கதையை பகிர்ந்திருக்கலாம். அவர்களும் ஒருவேளை யாவே இவரை பெருஞ் செல்வத்தால் ஆசீர்வதித் திருக்கிறார் எனவும் உணர்ந்திருக்கக்கூடும்.

நான்கு கிழக்கத்திய ராஜாக்களை வெற்றி கொண்டபின் முற்பிதாவானவர் இந்த போரில் பெற்ற வெற்றிக்கு அல்லது மக்களையும் கொள்ளையை திருப்பிக் கொண்டு வந்ததற்கு தனக்கு எந்த பெருமையும் இல்லை எனத் தெரிவித்து புறஜாதியாருக்கு சாட்சியாகிறார். ஆபிரகாம் தொழுதுக் கொள்ளுகிறார். வானத்தையும் பூமியையும் உடையவராகிய (அல்லது சிருஷ்டிகராகிய) உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு (யாவே) நேராக என் கையை உயர்த்துகிறேன். (14:22) இவர் “புற ஜாதிகளுக்கு” (גּוֹיִם, *goyim*, கொய்ம் ‘புறஜாதி’; ஏசாயா 49:6) “ஒளி”யாகத் திகழ்ந்தார்.

ஆபிரகாம் புறஜாதிகளுக்கு ஆசீர்வாதமாக இருக்கத் தொடங்கினார்; அவனது சந்ததியான, இஸ்ரவேலர்கள் அதனை தொடர வேண்டியிருந்தது. பல காலத்திற்குப்பின், சீனாய் மலையில் தேவன் தம் ஜனங்கள், “ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பார்கள்” (யாத். 19:6) என்றார். இஸ்ரவேலின் இரட்சிப்பு அத்துடனே முடியவில்லை. ஆசாரிய ராஜ்யமாய், தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனமாய், ஆசீர்வாதத்தின் வாய்க்காலாகவும், எல்லா ஜனங்களை இரட்சித்து ஆசீர்வதிக்க என்ன செய்வார் என்பதற்கான தேவனுடைய சத்தியத்தை மத்தியஸ்தம் செய்யவும் இரட்சிக்கப்பட்டிருக்கின்றனர், இவர்கள் புறஜாதியார் தங்கள் பொய்யான தேவனை விட்டு விட்டு உண்மை தேவனை ஆராதிக்கும்படி வழிநடத்த வேண்டியவர்களாவார்கள்.

சில புறஜாதி ஜனங்கள் செய்தியைக் கேட்டு உண்மையான தேவனிடம் திரும்பிவந்தனர். மீதியான் நாட்டு ஆசாரியன் யெத்ரோ (யாத். 18:1-12), மற்றும் ராகாப் என்ற வேசி (யோசுவா 2:9-14; 6:22-25), ஆகியோர் யாவேயின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். மோவாபியப் பெண் ரூத் யாவேயின் மீதுள்ள தன் விசுவாசத்தை வெளிப்படுத்தினாள் (ரூத் 1:16, 17). ஏத்தியனாகிய ஊரியா உட்பட தாவீதின் சில பராக்கிரமச் சாலிகளும் (2 சாமு. 23:36-39; 1 நாளா. 11:39-46). புறஜாதி களாயிருந்தனர். கித்தியனாகிய ஈத்தாய், அப்சலோமிடம் சிங்காசனமும், ராஜ்ஜியபாரமும் கடந்துச் சென்ற போதும் தாவீது தேவனுடைய மனிதனாக இருக்கிறார் என்று அவர் மீதும், யாவேயின் மீதும் விசுவாசமும் நம்பிக்கையும் உடைய வராயிருந்தார் (2 சாமு. 15:21). தாவீது பெலிஸ்திய தளபதியின் பொறுப்பில் தன் படையின் மூன்றில் ஒரு பங்கை விட்டுவிட்டு, அவனும்

அவன் மனிதரும் ராஜ்ஜியம் அப்சலோமின் பிடியில் விழாமல் தடுக்கச் சென்றனர் (2 சாமு. 18:1-5) பிற்காலத்தில் கர்த்தர் தாவீதைக் குறித்து "ஜனங்களுக்கு [புறஜாதிகளுக்கு[27]], சாட்சி எனவும், ஜனங்களுக்கு [புறஜாதிகளுக்கு] தலைவர், படைத்தளபதி" (ஏசாயா 55:4) எனவும் உரத்தார்.

*சோதோமின் ராஜாவுக்கும் அதன் துன்மார்க்க ஜனங்களுக்கு ஆபிரகாம் ஆசீவாதமானார்.* லோத்தையும், சோதோமின் மக்கள் மற்றும் அவர்களது உடமைகளையும் சிறைபிடித்துக் கொண்டுப் போனார்கள் என கேட்டவுடனே, முற்பிதா சுறுசுறுப்புடன் இயங்கினார். அவர் ஒரு சிறிய யுத்த வீரர்கள் மற்றும் எமோரிய சகோதரர்களின் சிறிய படையுடன் துரத்திச் சென்றார். லோத்து காப்பாற்றப்பட வேண்டிய சூழலில் இருப்பதால், அவரது உறவினரான முற்பிதா சிறிதும் தயக்கம் காட்டாமல் உயிரைக் கொடுத்துக் காப்பாற்ற முனைந்தார். சோதோமின் கெட்ட மனிதர்களைப் பற்றி என்ன கேடான இவர்களை இன்னும் சில நாட்களில் தேவன் அவர்களை சமவெளியின் மக்களோடே அழிப்பாரே (19:24, 25)? லோத்தும் சோதோமின் ஜனங்களும் காப்பாற்றப்பட தகுதியானவர்களா என ஆபிரகாம் தம் சுய விருப்பத்தைச் சார்ந்து தீர்மானிக்காமல் அவர்கள் தேவை யிலிருப்பவர்கள் அவர்களுக்கு உதவ அவர்கள் சார்பாக ஒருவர் தேவை என்பதின் அடிப்படையிலேச் செயல்பட்டார்.

ஆபிரகாமின் செயல் தேவன் தம் மக்கள் தங்களது அயலகத்தாரின் காரியத்தில் எல்லாக் காலங்களிலும் எப்படித் துரிதமாகச் செயல்பட வேண்டும் என ஒரு முன் மாதிரியானார். தேவன் இஸ்ரவேலருக்கு "உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக," என்று சொன்னபோது இதனை சொல்வதற்கு முன்னதாக அவர் பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர் மேல் பொறாமை கொள்ளாமலும், இருங்கள் என்றார் (லேவி. 19:18) மக்கள் இதனை அறிவுப் பூர்வ மாக்குவார்கள் எனவும், தங்களை நன்றாக நடத்துகின்ற நீதியுள்ள எபிரெய அயலகத்தாரையே அதிகமாய் நேசிப்பார்கள் என தேவனுக்குத் தெரியும். எப்படியிருப்பினும் பழிவாங்குதல், பொறாமை கொள்ளுதல் தடைச்செய்யப்பட்டிருப்பினும் அதற்கு நேர் எதிராக செயல் படுத்துகின்றனர். இது நேசிக்க அருகதை யற்றவனையும் நேசி என்றே பொருள்படும்.

இயேசுவின் போதனையிலும் இதே கருத்து முன்னிறுத்தப் படுகின்றது. அவர் இரண்டு கட்டளைகளை முன்னிறுத்தும்போது, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ... அன்புகூர்ந்து; உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்றார் (லூக். 10:27). இளம் நியாயசாஸ்திரி தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் "எனக்குப் பிறன் யார்?" (லூக். 10:29) என்று கேட்டான். இயேசு அவன் கேள்விக்கு பிரதியுத்தரமாக நல்ல சமாரியன்

கதையைச் சொல்கிறார். சாலை ஓரத்தில் அடிப்பட்டு, பொருளெல்லாம் திருடப்பட்டு, குற்றுயிராய், கொலையுயிராய் கிடந்த ஒருவனுக்கு நல்ல சமாரியன் உதவினார், கதையின் இறுதியில் அவர் கேள்வியை திருப்பி அவனிடமேக் கேட்கின்றார். கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் (ஆசாரியன், லேவியன் அல்லது சமாரியன்) எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது (லூக். 10:36)? கேள்வி எனக்கு பிறன் யாரல்ல? ஆனால் நான் யாருக்குப் பிறன் என்பதே கேள்வி (லூக். 10:37 காண்க) இனம், பொருளாதாரம், நிலை அல்லது ஒழுக்கநெறியுள்ளவர், நன்னடத் தையுள்ளவர் என்ற வித்தியாசம் இல்லாமல், தேவை யோடிருப்பவர்கள் அனைவருக்கும் உதவிடும் பிறனாய் நாமிருந்திட வேண்டும் என தேவன் எதிர்பார்க்கின்றார். இதேக் கருத்தினை பவுல் பிற்காலத்தில் இப்படிச் சொல்கிறார், “ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்” (கலா. 6:10). இயேசுவுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆபிரகாம் இப்படிப்பட்ட அன்பை அடுத்தவர்களுக்கு காண்பித்து உதாரணப்படுத்தினார்.

*ஆபிரகாம் மெல்கிசேதேக்குக்கு ஆசீர்வாதமாயிருந்தார்.* மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாமை எப்படித் தெரியும் என வசனம் சொல்கிறதில்லை. செல்வசெழிப்புள்ள அன்னியர் ஒருவர் ஒரு சிறிய படையுடன் சென்று ஆச்சரியப்படும் படியாக கிழக்கத்தியப் படையிடம் வெற்றிப்பெற்று வந்துள்ளார். கானானிலே எதிரிப் படையினரின் அட்டகாசம் பற்றி அறிந்ததினால், ஒருவேளை இச் செய்தி மிகத்துரிதமாக எங்கும் பரவியிருக்கலாம். ஆபிரகாம் கிழக்கத்திய படையினரை தோற்கடித்தது மட்டுல்ல சோதோமின் மக்களையும் அவர்களின் உடமைகளையும் மீட்டெடுத்து வந்துள்ளார். மெல்கிசேதேக்கு இந்த மனிதனைச் சந்தித்து, அப்பமும் திராட்சை ரசமும் கொடுத்து அவரை கனப்படுத்த வேண்டும். மட்டுமல்லாது உன்னதமான தேவனுடைய யாவே என்ற தனிப்பட்டப் பெயரை உடையவரின் நாமத்தினாலே அவரை ஆசீர்வதிக்க வேண்டும். முற்பிதாவானவர் மெல்கிசேதேக்குக்கு தம் கொள்ளையில் கிடைத்த யாவற்றிலும் பத்தில் ஒரு பங்கை கொடுத்தபோது, ஆசாரியன் கொஞ்சத்திற்கும் சந்தேகத்திற்கு இடமில்லாதபடி ஆசீர்வதிக்கப்பட்டவனாய் அறிந்துகொண்டான். இந்த அன்னியன் உண்மை தெய்வத்திற்கு அற்பணிக்கப்பட்டதை நிறைவேற்ற உண்மையுள்ளவராவார். கானான் நாட்டிலே கர்த்தருடைய பிரதிநிகளுக்குக் கொடுக்க மன உத்தமனா யிருக்கிறார் என அறிந்தார். மெல்கிசேதேக்குக்கு சுதந்திரமாக வழங்கிய வரம். இயேசு பிற்காலத்திலே ஆபிரகாமின் அனுபவத்தைப் பற்றி அறிவிக்கும் போது “வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்” (அப். 20:35) என்று சொன்னார்.

ஆதியாகமம் 14:20 வேதாகமத்திலிருந்து நாம் படிக்கிற தசமபாகம் பற்றி வருகின்ற முதல் தகவல். ஆனால் இது மிகப் பழமையான வழக்கம். கர்த்தருக்கு நன்றியினடையாளமாகவும் அவரே சிருஷ்டிகர் அவரே எல்லாவற்றுக்கும் சொந்தக்காரர் என்பதை அறிக்கையிடும்படியாகவும் தேவனுடைய மக்கள் தங்கள் உடமைகளிலிருந்து பத்திலொருப்பங்கை வழங்கினார்கள். நமக்கெதுவெல்லாம் சொந்தமோ அவையனைத்தும் அவர் கையிலிருந்து நம் கைக்கு மாறியிருக்கிறது. தாவீது மனப்பூர்வமாக ஆண்டவருக்குக் கொடுத்து, மக்களும் மன உற்சாகத்துடனும், உதாரத்துவத்துடனும் ஆலயத்திற்காக கொடுப்பதை சாட்சியாகக் கண்ட போது அவன் ஜெபித்தான். “இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்” (1 நாளா. 29:14).

பவுலும் தாம் எருசலேமிலிருக்கும் ஏழை பரிசுத்தவான்களுக்கு கொடுக்க ஐரோப்பியாவிலும் சின்ன ஆசியாவிலும் சேகரிக்கும் உள்ள புறஜாதி சபைகளிடமிருந்து பெரிய சேகரிப்புக்கு மனப்பூர்வமாகவும் உதாரத்துவமாகவும் கொடுக்க கொரிந்திய சகோதரர்களை உற்சாகப்படுத்த இதே சொற்றொடரை கையாளுகின்றார் (1 கொரி. 16:1-4). தாவீதின் காலத்தைப் போலவே கிறிஸ்தவ கொடுப்பினைக் காணப்பட வேண்டுமென அப்போஸ்தலர் உறுதியுடன் கூறுகின்றார். அவரது ஜனங்களுக்கு தேவனது கிருபையும் உதாரத்துவமுமான வரங்களாகும். பவுல் சபைக்கு கொடுக்கும்படி கட்டளையிடாமல் அவர்தம் உண்மையான அன்பை சோதிக்க ஒரு வாய்ப்பை வழங்குகின்றார். அவர் சொல்கிறார் “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ள வராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரிய வான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே” (2 கொரி. 8:9; 9:7-15 காண்க).

---

இறுதிக் குறிப்புகள்

[1]சார்லஸ் எல். வ்வின்பெர்க் பாபிலோனிய மொழியில் இந்தப் பெயர் லார்சா (“லார்சா நகரம்”) அதன் பழைய சுமேரியப் பெயர் “அர்அர்வா” (“வெளிச்சத்தின் உறைவிடம்”) எனக் குறிப்பிடுகின்றார். (Charles L. Feinberg, “Ellasar,” in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982], 2:73–74.) சிலர் ஏல்லாஸாரை, மெசப்பொத்தோமியாவைச் சேர்ந்ததென பாபிலோனியாவில் உள்ள லார்சா வை (சூரிய கடவுளின் பட்டணம்) இத்துடன் ஒப்பிடுகின்றனர். “ஆரியோக்” இதன் பொருத்தமான ராஜாவின் பெயர். [2]K. A. Kitchen, *On the Reliability of the Old Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 2003), 320. [3]David M. Howard, Jr., “Siddim, Valley of,” in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 4:499–500). [4]*Genesis Apocryphon* 21. [5]Michael C. Astour,

"El-paran," in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 2:423. பாரான் வனாந்திரம் பெரிய பாலைவனப் பகுதி, இது பண்டைய கானானின் தென்பகுதி தொடங்கி ஏலாத்வரை படர்ந்துள்ளது, சீனாய் தீபகற்பத்தின் சிலப் பகுதிகளையும் உள்ளடக்கியது. [6]எமோரியரின் மற்றுமொரு பலத்த துருகம் கிழக்கே (எண். 21:13, 21-31) மற்றும் மேற்கே (யோசுவா 7:7; 10:5-12) யோர்தான் நதிவரை பரவியிருந்தது. [7]Duane E. Smith, "Bitumen," in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 1:521. [8]Josephus *Antiquities* 1.9. [9]John T. Willis, *Genesis*, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 227. [10]"எஸ்கோல்" எப்ரோனின் அருகிலிருந்த பள்ளதாக்குக்கு பெயர் (எண். 13:23, 24). "[திராட்சைக்] கொத்து" எனப் பொருள்படும்.

[11]"எபிரெயர்" என்னும் பெயர் "ஏபேர்" என்ற பதத்திலிருந்து வந்திருக்கலாம் (10:21-25; 11:14-16) ஏனெனில் இவ்விரண்டுச் சொல்லும் மூன்று மெய்யெழுத்துகளே: עבר (*'br*) எபிரெய மொழிக்கு கிறிஸ்துவுக்குப்பின் 800ம் ஆண்டு வரை எழுத்தில் உயிரெழுத்து இல்லை. வித்தியாசமான எழுத்துக்களும் உச்சரிப்புகளும் எவ்வாறு தொடங்கியது என சரியாகக் கணிக்கவியலாது. [12]பண்டைய செமெத்திய மொழியில் 'அபிர் மறும் இபிர் இரண்டுமே இணைக்கும் வார்த்தைகளில் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் வருகின்றது. (Victor P. Hamilton, *The Book of Genesis: Chapters 1—17*, The New International Commentary on the Old Testament [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1990], 405.) [13]இந்த மொழிபெயரப்பு சில NASB அச்சுகளில் ஓரத்தில் குறிப்பில் உள்ளது. [14]Bruce K. Waltke, *Genesis: A Commentary* (Grand Rapids, Mich.: Zondervan Publishers, 2001), 232. [15]"உறவு" (אָח, *'ach*) ஒரே பெயர் சொல் "நாங்கள் சகோதரர்கள்" (13:8) என்பதில் பயன்படுத்தபட்டுள்ளது. [16]Victor P. Hamilton, "חָנִיךְ," in *TWOT*, 1.301. [17]மைக்கேல் சி. அஸ்டூர், "சவே பள்ளத்தாக்கு," இந்த ஆங்கர் பேபிள் டிக்ஷ்னரி, 5:1168. [18]பிரான்சிஸ் புரவுன், எஸ். ஆர் டிரைவர், மற்றும் சார்லஸ் எ. பிரிகர், எ ஈப்புரு அண்ட் இங்கிளீஸ் லெக்ஸிகன் ஆப் தி ஓல்ட் டெஸ்ட்டமென்ட் (ஆக்ஸ்போர்ட்: கிளாரன்டன் பிரஸ், 1962), 751. [19]மைக்கேல் சி. அஸ்டூர், "மெல்கிசேதேக்கு" இந் த ஆங்கர் பேபிள் டிக்ஷ்னரி, 4:684.

[20]ஜார்ஜ் ஜே. புரூக்கி, "மெல்கிசேதேக்கு," இந் த ஆங்கர் பேபிள் டிக்ஷ்னரி, 4:687-88. [21]புரவுன், டிரைவர், மற்றும் பிரிக்ஸ், 888-889. [22]ஆர். லாயிர்ட் ஹாரீஸ், "קָנָה," டிடப்ளியுஒடி, 2:803-4. [23]מָגַן (*magan*) என்ற வினைச்சொல் "விடுதலை" என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, அதே வேரிலிருந்து (מָגֵן, *magen*) 15:1ல் "கேடயம்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வேர் எபிரெயத்தில் இரண்டு கதைகளையும் மிக சிறப்பாக பொருத்தியுள்ளது. [24]கோர்டன் ஜெ. வென்னம், ஆதியாகமம் 1-15 வோட் பிப்பிளிக்கல் காமென்டரி தொகுதி. 1. (வெக்கோ டெக்ஸ் வொல்ட் புக்ஸ், 1987), 317; ஜான் ட. ஆர்டிலி "צָר," டிடப்ளியுஒடி, 2:779. [25]உதாரணமாக அப்படிப்பட்ட தசமபாகத்திற்கு ஜான் ஹெச். வால்டன் "ஜெனிசிஸ்" இன் ஜோன்டவோன் இல்லஸ்ட்டியேட் பைபிள் பேக்கிரவுண் காமென்டரி வாலியும் 1 ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம். தொகுப்பு ஜான் ஹெச். (வால்டன் கிரேண்ட் ரேப்பீட்ஸ் மைக் ஜோண்ரோவன், 2009), 83. [26]ஆபிரகாம் தன் கைகளை யாவேவுக்கு நேராக தூக்கினான் என எபிரெயர் சொல்கிறது. அது அவன் சத்தியம் செய்வதற்கு ஒப்பாயிருக்கிறது. பண்டைய நாட்களில் சபதம் செய்வதற்கு அடையாளம் கைகளை தூக்குவதாகும், இதற்கு செய்த சபத்தை நிறைவேற்றுவேன் என்பதாகும் (உபா. 32:40; ஏசாயா 62:8; தானி. 12:7). [27]பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் என்பது ஒருமையில் தேவனுடைய "மக்கள்" (யாத். 3:7, 10; 4:29-31; 5:1; 19:6-11) ஆனால் புறஜாதியார் "மக்கள்" எனப் பன்மையில் வருகிறது (யாத். 19:5; சங். 96:1-13; ஏசாயா 56:6-8) தேவன் அவர்களை அவரது மக்களுடைய சாட்சியினால் இரட்சிக்க விரும்புகிறார்.